ஆறடி மனிதனும் ஆறாத அகங்காரமும்

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 APRIL


மலர்: 10 இதழ் : 7 ஏப்ரல் 2017 விலை: ரூ. 5




சூரியனோடு குடும்பத்தின் குருப் ஃபோட்டோ




இதர கோள்களோடு பூமியின் குருப் ஃபோட்டோ




## உங்கள் இருப்பிடம் எங்கே?





பால்வெளித் அண்டத்தில் சூரியக் குடும்பம்



அண்டங்களின் தொகுப்புகள்

# சூரியனின் மேற்பரப்புக்கு அருகில் பூமியை வைத்தால்....!








## ஆறடி மனிதா உன் இருப்பிடம் எங்கே?

## பேரண்டத்தில் நாம்



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 APRIL**

**மலர்: 10 இதழ் : 7 ஏப்ரல் 2017 விலை: ரூ. 5**

# பொருளடக்கம்

மாறும் முகவரிகள் -2
வாசகர் எண்ணம் -4
ஆறடி மனிதனும்
ஆறாத அகங்காரமும் -5
உங்கள் விசாலமான முகவரி -8
பிழையான நாத்திக வாதம்!-12
மோசடிக்காரர்கள்
நாசம் அடைவர்! -15
வணிகமும் வணக்கமே! -17
ஆறடி மனிதா உன் விலையென்ன? -19
ஹம்ஜா(ரலி) இஸ்லாமை தழுவுதல் -22
விருந்தோம்பல் -23
இறைவனே மெச்சிய விருந்தோம்பல் -24

● **21:22. வானத்திலும் பூமியிலும் அல்லாஹ் ஒருவனைத் தவிர மற்ற கடவுளர்களும் இருந்திருந்தால் அவ்விரண்டின் ஒழுங்கமைப்பும் சீர்குலைந்து போயிருக்கும். எனவே, அவர்களின் பொய்யான வர்ணனையிலிருந்து ‘அர்ஷு’க்கு உரியவனான அல்லாஹ் மிகப் புனிதமானவன்.**

*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)*

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# மாறும் முகவரிகள்

உங்கள் முகவரி என்ன? என்ற கேட்டவுடன் சட்டென உங்கள் தற்போதைய முகவரியைக் கூறி விடுவீர்கள்.

இதற்கு முன் எங்கிருந்தீர்கள் என்று உங்கள் முந்தைய முகவரிகளைப் பற்றிக் கேட்டால்?



ஒவ்வொன்றாகக் கூறுவீர்கள்...

அதற்கு முன், அதற்கு முன் என்று கேட்கக் கேட்க ... அது ஒரு தொடர்போல நீளலாம்...

இறுதியில் அது உங்கள் தாயின் கருவறையை அடையும் என்பதை அறிவீர்கள்...

அதற்கும் முன்?

கருத்தரிக்கும் முன் நீங்கள் கடந்து வந்த பாதையின் கட்டங்கள் உங்கள் முகவரித் தொடரில் இடம்பெறலாம்..

அதற்கும் முன் என்று கேட்டால்...

இறுதியாக முகவரியே இல்லாத நிலை ஒன்றை அறிவீர்கள்... திருக்குர்ஆனில் உங்களைப் படைத்தவன் அந்நிலையை நினைவூட்டுகிறான்:

- **76:1. திட்டமாக மனிதன் மீது காலத்தில் ஒரு நேரம் வந்து, அதில் அவன் இன்ன பொருள் என்று குறிப்பிட்டுக் கூறுவதற்கில்லாத நிலையில் இருக்கவில்லையா?**
- **76:2. (பின்னர் ஆண், பெண்) கலப்பான இந்திரியத் துளியிலிருந்து நிச்சயமாக மனிதனை நாமே படைத்தோம் - அவனை நாம் சோதிப்பதற்காக அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கினோம்.**

மேலும் கேட்கிறான் :

- **2:28. நீங்கள் எப்படி இறைவனை நம்ப மறுக்கிறீர்கள்? உயிரற்றோராக இருந்த உங்களுக்கு அவனே உயிரூட்டினான் பின்பு அவன் உங்களை மரிக்கச்செய்வான் மீண்டும் உங்களை உயிர் பெறச் செய்வான் இன்னும் நீங்கள் அவன் பக்கமே திருப்பிக்கொண்டுவரப் படுவீர்கள்**

## இப்பூவுலக முகவரிகள்

தாயின் கருவறையிலிருந்து வெளிவந்த பின் தாயின் மடி, தொட்டில், கட்டில் என உங்கள் முகவரிகள் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. உங்கள் வளர்ப்பு, கல்வி, தொழில் போன்றவற்றைப் பொறுத்து இந்தப் புவியின் மீது உங்கள் முகவரியானது தொடர்ந்து பல மாற்றங்களுக்குள்ளாகி இறுதியில் கல்லறைக்குள் சென்று அடங்க உள்ளது என்பதை அறிவீர்கள். ஆனால் கல்லறையில் இருந்து தொடங்கி கருவறையில் முடியும் இந்தப் பயணத்தின் உண்மை நோக்கம் பற்றிய சிந்தனை பெரும்பாலோருக்கு இருப்பதில்லை. அதை நினைவூட்டுவதற்காகவே இப்பயணத்தை நிர்வகித்து வரும் இறைவன் தன் தூதர்களையும் வேதங்களையும் அவ்வப்போது அனுப்பி வந்துள்ளான். அந்த வகையில் இவ்வுலகிற்கு இறுதியாக வந்த வேதமாம் திருக்குர்ஆனில் இறைவன் கூறுவதைக் கேளுங்கள்:

- **56:57-59 நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா? (கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா? அதை நீங்கள்**

**படைக்கிறீர்களா?அல்லது நாம் படைக்கின்றோமா?**

*படைத்தவனை மறுப்பவர்களைப் பார்த்து அவன் கேட்கிறான்:*

- **52:35,36 எப்பொருளும் இன்றி அவர்கள் படைக்கப்பட்டார்களா? அல்லது அவர்களே படைக்கக்கூடியவர்களா? அல்லது வானங்களையும், பூமியையும் அவர்களே படைத்தார்களா? அவ்வாறில்லை! அவர்கள் உறுதியாக நம்ப மாட்டார்கள்**

*அவ்வாறு படைத்தவன் நமக்காக அயராது வழங்கிவரும் அருட்கொடைகள் பற்றி நினைவூட்டுகிறான்.*

**78:6. நாம் இப்பூமியை விரிப்பாக ஆக்கவில்லையா?**

**78:7. இன்னும், மலைகளை முளைகளாக ஆக்கவில்லையா?**

**78:8. இன்னும் உங்களை ஜோடி ஜோடியாகப் படைத்தோம்.**

**78:9. மேலும், உங்களுடைய தூக்கத்தை இளைப்பாறுதலாக ஆக்கினோம்.**

**78:10. அன்றியும், இரவை உங்களுக்கு ஆடையாக ஆக்கினோம்.**

**78:11. மேலும், பகலை உங்கள் வாழ்க்கை (வசதிகளைத் தேடிக்கொள்ளும் காலம்) ஆக்கினோம்.**

**78:12. உங்களுக்குமேல் பலமான ஏழுவானங்களை உண்டாக்கினோம்.**

**78:13. ஒளிவீசும் விளக்கை(சூரியனை)யும் (அங்கு) அமைத்தோம்.**

**78:14. அன்றியும், கார்மேகங்களிலிருந்து பொழியும் மழையையும் இறக்கினோம்.**

**78:15. அதைக் கொண்டு தானியங்களையும், தாவரங்களையும் நாம் வெளிப்படுத்துவதற்காக.**

**78:16. (கிளைகளுடன்) அடர்ந்த சோலைகளையும் (வெளிப்படுத்துவதற்காக).**

*இன்னும் இங்கு பட்டியலிடப்படாத எண்ணற்ற அருட்கொடைகள்... இவை அனைத்தும் இங்கு நடப்பது மனிதன் என்று முக்கியமான ஜீவியாகிய உங்களை வாழவைப்பதற்குத் தானே?*

*இவ்வாறு இப்பிரபஞ்சம் முழுவதுமே உங்களுக்காக இயங்கிக்கொண்டிருக்கும் போது நீங்கள் வீணுக்காகப் படைக்கப் பட்டிருப்பீர்களா?*

*இதையே இறைவன் கேட்கிறான்:*

**23:115. நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?**

*அவ்வாறு பகுத்தறிவோடு சிந்திக்கும்போது இவை எதுவும் வீணுக்காக அல்ல. ஒரு மகத்தான உறுதியான திட்டத்தின் கீழ்தான் நாம் படைக்கப் பட்டிருக்கிறோம் என்பது புலனாகும். இறைத்தூதர்களும் இறைவேதங்களும் நமக்கு எடுத்துச் சொல்வது உண்மை என்று புலப்படும். அந்த உண்மை என்னவெனில் இவ்வுலகை இறைவன் ஒரு பரீட்சைக்கூடமாகப் படைத்துள்ளான் என்பது. இதில் நமது செயல்கள் அனைத்தும் பதிவு செய்யப் படுகின்றன. யார் இறைவனுடைய கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு சொர்க்கம் என்ற நிரந்தர வசிப்பிடம் உண்டு. யார் கட்டுப் படாமல் தான்தோன்றித்தனமாக வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் தோல்வி அடைகிறார்கள். அவர்களுக்கு நரகம் என்ற நிரந்தர வேதனைகள் கொண்ட வசிப்பிடம்தான் கிடைக்கும்.*

ஆக, கருவறை தொடங்கி கல்லறையில் முடியும் இப்பயணத்தின் வெற்றி இவ்வுண்மைகளை உணர்ந்து அதற்கேற்றவாறு செயல்படுவதில்தான் உள்ளது.

## இறுதி முகவரி:

இப்பூவுலக முகவரிகளைப் பொறுத்தவரையில் நமக்கு பொருத்தமானவாறு அவற்றைத் தேர்ந்தெடுக்க முடியும். ஓரிடம் ஒத்துவராவிட்டால் வேறிடம் தேடிச் செல்ல முடியும். ஆனால் கல்லறைக்குப் பின்னருள்ள முகவரி அவ்வாறல்ல. அதுவே நம் நிரந்தர வாழ்விடம்- மேற்படி சாய்ஸ் என்பது அங்கு கிடையாது. திரும்பி வருதலும் தப்பித்துக் கொள்வதும் அங்கு சாத்தியமில்லை. அங்கு இரண்டே இடங்களே உண்டு.. ஒன்று சொர்க்கம்... மற்றது நரகம். அந்த இறுதி முகவரி சொர்க்கமாக அமைய வேண்டுமானால் அதற்காக முயற்சியும் உழைத்தலும் இன்றே கைகொள்ள வேண்டும்.... மரணம் நம்மை வந்தடைவதற்கு முன்!

● **3:185. ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில் தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும் எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார் இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை.**

# வாசகர் எண்ணம்

● பிப்ரவரி இதழில் ‘இசங்கள் அனைத்தையும் முறியடிக்கும் இஸ்லாம்’ என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது. அங்கே பெரியாரின் புகைப்படத்தையும் இடம்பெறச் செய்தது ஏன். விளக்கினால் நன்றிமிக்கவன் ஆவேன். மதுவின் தீமைகள் பற்றிய கட்டுரை எல்லோரிடமும் எடுத்துச்செல்லபட வேண்டிய வழிகாட்டுதல். ’உலக அழிவுக்கு முன் அறிகுறிகள்’ இன்றைய உலக நடைமுறைகளோடு பொருந்துவதைக் காண முடிகிறது.

**- தஞ்சை என்.ஜே. கந்தமாறன், சென்னை**

அய்யா, ‘இசங்கள் அனைத்தையும் முறியடிக்கும் இஸ்லாம்’ கட்டுரை உலகில் மனிதர்கள் சிந்தித்து உருவாக்கிய இசங்களுக்கும் இவ்வுலகைப் படைத்த இறைவன் வழங்கும் முழுமையான வாழ்க்கை நெறியான இஸ்லாத்தையும் ஒப்பிடு செய்வதாக இருந்தது. அந்த வகையில் தமிழகத்தில் தாக்கத்தை உண்டுபண்ணிய ஒரு இசத்திற்கு சொந்தகாரரான பெரியாரின் புகைப்படத்தையும் அங்கு இடம்பெறச் செய்தோம்.

**- ஆசிரியர்**

● எறும்புகள் உலகம் கட்டுரை அருமை. இவ்வளவு சிறிய எறும்புக்குள் இவ்வளவு பெரிய விஷயங்களா? நோய்நிவாரணம் தரும் வசனங்கள் மிகவும் பயனுள்ளவை. தொடர்ந்து இடம்பெறச் செய்யவும்.

**- ஜமுனாராணி, திருச்செங்கோடு**

# ஆறடி மனிதனும் ஆறாத அகங்காரமும்

ஆறடி மனிதனுக்கு இறைவன் கூறும் அறிவுரை இது..

● **17:37. மேலும், நீர் பூமியில் பெருமையாய் நடக்க வேண்டாம் (ஏனென்றால்) நிச்சயமாக நீர் பூமியைப் பிளந்துவிட முடியாது மலையின் உச்சி(யளவு)க்கு உயர்ந்து விடவும் முடியாது.**

இன்று நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இந்த பூமிப்பந்தின் குறுக்களவு அதாவது விட்டம் - *12,756* கிலோமீட்டர். இதன் பரப்பளவு *510,10,00,000* சதுர கிலோமீட்டர்கள். இதிலும் மூன்றில் ஒரு பங்குதான் நிலம். மீதியோ கடலால் சூழப் பட்டுள்ளது. இதன் மீதுதான் கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கோடிக் கணக்கானோர் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். எதிர்காலத் தலைமுறைகள் வாழக் காத்திருக்கின்றன.



● **பூமியை உங்களை அணைத்துக் கொண்டிருப்பதாக நாம் ஆக்கவில்லையா? உயிருள்ளோருக்கும், மரித்தோருக்கும் (அது இடம் அளிக்கிறது). அன்றியும், அதில் உயர்ந்த மலைகளையும் நாம் ஆக்கினோம் இனிமையான தண்ணீரையும் நாம் உங்களுக்குப் புகட்டினோம். (திருக்குர்ஆன் 77:25-27)**

● **(அவனே) உங்களுக்காக இப்பூமியை ஒரு விரிப்பாக அமைத்தான் இன்னும் அதில் உங்களுக்குப் பாதைகளை இலேசாக்கினான் மேலும் வானத்திலிருந்து நீரையும் இறக்கினான் இம் மழை நீரைக் கொண்டு நாம் பல விதமான தாவரவர்க்கங்களை ஜோடி ஜோடியாக வெளிப்படுத்துகிறோம். (அவற்றிலிருந்து) நீங்களும் புசித்து உங்கள் கால்நடைகளையும் மேய விடுங்கள். நிச்சயமாக இதில் அறிவுடையோருக்குத் (தக்க) அத்தாட்சிகள் இருக்கின்றன. (திருக்குர்ஆன் 20:53,54)**

அதே பூமியில் தோன்றி மறைந்த அனைத்து மனிதர்களும் அதிலிருந்தே மீண்டும் விசாரணைக்காக இறைவனால் எழுப்பப்பட உள்ளார்கள்:

● **இப் பூமியிலிருந்து நாம் உங்களைப் படைத்தோம் அதனுள்ளேயே நாம் உங்களை மீட்டுவோம் இன்னும், அதிலிருந்தே நாம் உங்களை இரண்டாம் முறையாகவும் வெளிப்படுத்துவோம். (திருக்குர்ஆன் 20:55)**

இந்த நிலப்பரப்பின் பின்னணியில் இதன் மீது சுமார் ஆறடி உயரமும் ஒன்றரை அடி குறுக்களவும் கொண்ட மனிதன் என்பவன் எவ்வளவு அற்பமான படைப்பு என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். இதன் மீது நீர்க்குமிழி போல தோன்றி மறையும் அவனது ஆயுளும் அற்பமானது என்பதை நாம் அறிவோம். நமக்கு இவ்வளவு பிரம்மாண்டமானதாகத் தெரியும் இந்த பூமியை இன்னபிற கோள்களோடும் சூரியனோடும் ஒப்பீடு செய்யும்போது இந்த பூமி எவ்வளவு அற்பமானது என்பது புரியும். நம் சூரிய குடும்பம் அது சார்ந்த பால்வெளி மண்டலத்தில் எவ்வளவு அற்பமானது



என்பதையும் பால்வெளி மண்டலம் அது சார்ந்த அடுத்த மண்டலங்களின் தொகுப்பில் எவ்வளவு அற்பமானது என்றும் அடுத்தடுத்து ஒப்பீடு செய்யும்போது மனிதனின் அற்பநிலையின் உண்மை விளங்கும். அத்துடன் இவற்றையெல்லாம் படைத்து பரிபாலித்து வரும் நம் இறைவனின் உள்ளமையும் வல்லமையும் பற்றி உணர முடியும்.

## உணராதோர் நிலை

ஆனால் இவை எதையுமே கண்டு கொள்ளாமல் இந்த பூமியின் மீது அகங்காரம் கொண்டும் கர்வம் கொண்டும் நடந்து கொண்டவர்களின் நிலை பரிதாபத்திற்குரியது. இறைவனின் தூதர்களும் நல்லோரும் அவர்களுக்கு மரணத்தைப்பற்றியும் இறைவனைப்பற்றியும் மறுமையில் விசாரணை பற்றியும் எச்சரித்தபோது அவற்றைப் புச்சமாகக் கருதினார்கள். தங்கள் அநியாயங்களில் அத்துமீறல்களில் வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள்.

- ஆறடி உயரம் நின்று கொண்டு தங்களையே கடவுள் என்று கூறிக்கொண்டவர்களும் அவர்களில் உண்டு.
- தங்களைத் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற மமதையில் அடக்குமுறைகளையும் அக்கிரமங்களையும் கையாண்டவர்களும் அவர்களில் உண்டு.
- தங்கள் வாழ்வு இங்கேயே நிலைக்கும் என்று நினைத்து மலைகளைக் குடைந்து வீடுகளை அமைத்தவர்களும் மாட மாளிகைகளும் இரும்புக் கோட்டைகளும் கட்டி அழகு பார்த்தவர்களும் அவர்களில் உண்டு.
- இங்கு நிலையாக இருப்போம் என்ற நினைப்பில் அப்பாவிகளைப் படுகொலைகளை செய்தும் நாடுகளையும் கண்டங்களையும் சூறையாடியும் வல்லரசுகளை நிருவி மற்றவர்களை மண்டியிடச் செய்வதில் சுகம் கண்டவர்களும் அவர்களில் உண்டு.



ஆனால் அவர்கள் அனைவருக்கும் பூமிக்கடியில் ஆறு அல்லது ஏழடி நீளமும் இரண்டு அடி அகலமும் இரண்டு அடி ஆழமும் கொண்ட ஒரு இடம்தான் இறுதி இருப்பிடமாக - இறுதி முகவரியாக - அமைந்தது. ஆனால் அந்த இடங்களில் இன்று அவர்களுடைய உடலும் கூட காணப்படுவதில்லை. அவர்களில் சிலர் அந்த இறுதி இருப்பிடத்தையும் அடையவில்லை. சிலரின் உடல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இன்னும் சிலரின் உடல்கள் மீன்களுக்கும் பறவைகளுக்கும் உணவாயின.

ஆனால் இறுதிவரை அவர்கள் செய்த அத்துமீறல்களை படுகொலைகளை சூறையாடல்களை தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற உணர்வோடு வாழ்ந்தார்கள் இறைவன் அனைத்தையும் காண்கிறான் என்ற உணர்வு இல்லாமலேயே! அன்றைய குற்றவாளிகளுக்கு ஒப்பான அல்லது அதைவிட கொடூரமான குற்றவாளிகள் இன்றும் வாழ்ந்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். யாராயினும் இறைவனின் நீதிவிசாரணையில் இருந்தும் தண்டனைகளில் இருந்தும் தப்ப முடியாது எனபதை கீழ்கண்ட இறைவசனங்கள் எச்சரிக்கின்றன:

**14:42. இந்த அக்கிரமக்காரர்களின் செயல்களை அல்லாஹ் கவனிக்காமல் இருக்கின்றான் என்று (நபியே!) நீர் கருத வேண்டாம்! அவர்களை அவன் விட்டுவைத்திருப்பது ஒரு குறிப்பிட்ட நாள் வரைக்கும்தான்! அந்நாளில் அவர்களின் விழிகள் மருளும்.**

**14:43. அவர்கள் தம் தலைகளை மேலே உயர்த்திக் கொண்டு ஓடுவார்கள் அவர்களின் பார்வை நிலை குத்தியிருக்கும் மேலும், அவர்களுடைய இதயங்கள் சூன்யமாகிவிட்டிருக்கும்!**

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்று பொருள்)

*தாங்கள் இந்த பூமியில் உயிரோடு உலவிய காலத்தில் செய்த அத்துமீறல்கள் விசாரிக்கப்பட்டு தண்டனை அவர்கள் மீது விதியாக்கப் படும்போது அந்த முன்னாள் ராஜாதிராஜர்களும் கொடுங்கோலர்களும் இறைவன் முன் மண்டியிட்டுக் கதறுவார்கள். அவற்றிற்கு இறைவன் கொடுக்கும் பதில்களையும் பாருங்கள்:*

**14:44. வேதனை வரக்கூடிய அந்நாளைப் பற்றி மக்களுக்கு எச்சரிக்கை செய்வீராக! அன்று இந்த அக்கிரமக்காரர்கள் கூறுவார்கள்: "எங்கள் இறைவனே! இன்னும் சிறிது காலம் வரை எங்களுக்கு அவகாசம் அளிப்பாயாக! அவ்வாறு அளித்தால், உனது அழைப்பினை நாங்கள் விரைந்து ஏற்றுக் கொள்வோம். மேலும், (உன்) தூதர்களையும் பின்பற்றுவோம்." (அப்போது அவர்களுக்கு இவ்வாறு தெளிவாகப் பதில் கூறப்படும்:) "எங்களுக்கு அழிவே இல்லை" என்று இதற்கு முன்னர் (பல முறை) சத்தியம் செய்து கூறிக் கொண்டிருந்தவர்கள் அல்லவா நீங்கள்!**

**14:45. உண்மையில் தமக்குத் தாமே அநீதி இழைத்துக் கொண்டவர்கள் வாழ்ந்த ஊர்களில்தான் நீங்கள் வசித்து வந்தீர்கள் அவர்களிடம் நாம் எவ்வாறு நடந்துகொண்டோம் என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டிருந்தது மேலும், அவர்களை உதாரணமாகக் கூறியும் உங்களுக்கு உண்மையைப் புரிய வைத்திருந்தோம்!**

**14:46. அவர்கள் விதவிதமான சூழ்ச்சிகளைச் செய்து பார்த்தனர். அவர்களுடைய சூழ்ச்சிகள் மலைகளையே பெயர்த்துவிடக் கூடியவையாக இருப்பினும் அவர்களுடைய ஒவ்வொரு சூழ்ச்சியையும் முறியடிக்கும் சூட்சுமம் அல்லாஹ்விடம் இருந்தது.**

*இறைவன் குற்றவாளிகளை உடனுக்குடன் தண்டிக்காததற்குக் காரணம் இவ்வுலக வாழ்க்கையை ஒரு பரீட்சைப் போலவும் இந்த தற்காலிக உலகை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைத்துள்ளதாலேயே. உடனுக்குடன் தண்டித்தல் என்பது பரீட்சையின் நோக்கத்திற்கு எதிரானது. அதிபக்குவமான முறையில் இவ்வுலகைப் படைத்துள்ள இறைவன் நீதி செல்த்துவதிலும் அதிபக்குவமானவன். அவன் தன் தூதர்கள் மூலமாக வாக்களித்துள்ளபடி குற்றவாளிகளுக்குரிய தண்டனைகள் நிறைவேறியே தீரும் என்பதை இறைவன் நினைவூட்டுகிறான்:*

**14:47. (நபியே!) அல்லாஹ் தன் தூதர்களிடம் அளித்துள்ள வாக்குறுதிக்கு மாறு செய்வான் என்று நீர் ஒருபோதும் கருதவேண்டாம். திண்ணமாக, அல்லாஹ் வல்லமையுடையவனும், பழிவாங்குபவனும் ஆவான்.**

**14:48. அந்த நாளில் இந்த பூமி வேறு பூமியாகவும், இந்த வானங்கள் வேறு வானங்களாகவும் மாற்றப்பட்டு, அடக்கியாளும் ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் திருமுன்னர் ஒளிவு மறைவின்றி எல்லாரும் வந்து சேர்வார்கள்**

**14:49. அத்தகைய ஒரு நாளைக் குறித்து நீர் அவர்களை எச்சரிப்பீராக! அந்நாளில் குற்றவாளி(களின் கை கால்)கள் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டிருப்பதை நீர் காண்பீர்.**

**14:50. அவர்கள் தார் ஆடைகளை அணிந்திருப்பார்கள். மேலும், அவர்களின் முகங்களை தீக்கொழுந்துகள் மூடியிருக்கும்.**

**14:51. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் செய்த செயல்களின் கூலியை அல்லாஹ் வழங்க வேண்டும் என்பதற்காக (இவ்வாறு செய்யப்படும்)! திண்ணமாக, அல்லாஹ் விரைவாய்க் கணக்கு வாங்குபவனாவான்.**


# உங்கள் விசாலமான முகவரி

வாழ்க்கைப் பருவங்களின் பல படித்தரங்கள் கடந்து தற்போது ஒரு முழு மனிதனாக நீங்கள் உருவெடுத்திருக்கக் கூடும். உங்கள் தற்போதைய முகவரி என்ன என்று கேட்டால் தங்களின் பெயர், வீடு, தெரு,ஊர் விவரங்களைக் கூறுவீர்கள்தானே?

உதாரணத்துக்கு இதுதான் உங்கள் முகவரி..

ராஜா, 13, சந்நிதி தெரு, கருமத்தம்பட்டி, கோவை 641659, தமிழ்நாடு

அதே சமயம் முகவரியைக் கேட்டவர் இன்னொரு நாட்டிலிருந்து கேட்டால் கூடுதலாக இந்தியா என்று நாட்டையும் சேர்ப்போம். அவ்வளவுதான் நாமறிந்தது. அதை மீறி நம்மில் பெரும்பாலோரது கவனம் செல்வதில்லை.



உண்மையில் இவ்வளவுதான் நம் முகவரியா? நம் முகவரிக்கு எல்லை அவ்வளவுதானா?

நமது முகவரியின் விசாலத்தைப் பற்றிய அறியாமையும் கவனமின்மையும் மனிதனை குறுகிய சிந்தையுள்ளவனாக ஆக்குகிறது. நம்மைப் படைத்தவனின் உள்ளமையையும் வல்லமையையும் பறைசாற்றும் சான்றுகளின்பால் கவனத்தை செலுத்தினாலே மனிதனின் அகங்காரமும் அகந்தையும் அறியாமையும் அகலும். இறைவனுக்கு தன் செயல்களுக்காக பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வு அவனை ஆட்கொள்ளும்.

● **நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன. அத்தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும் தங்கள் விலாப் புறங்களில் (சாய்ந்து) இருக்கும் போதும் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள் வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, "எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை நீ மகா தூய்மையானவன் (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!" (என்று கூறுவார்கள்) (திருக்குர்ஆன் 3:190,191)**

வாருங்கள் நம் முகவரி இன்னும் எவ்வளவு விசாலமானது என்பதைக் கண்டுவர முயல்வோம்...

## பூமி என்ற உருண்டை


இந்தியா என்கிற இந்த நாட்டை அடுத்து தொடர்வது.. ஆசியாக் கண்டம்... தொடர்ந்து இந்த பூமி என்ற உருண்டை. பாமரர்களில் பெரும்பாலானோருக்கு இன்னும் இதை கற்பனை செய்து கூட பார்க்க முடிவதில்லை.



இன்று நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் இந்த பூமிப்பந்தின் குறுக்களவு அதாவது விட்டம் - 12,756 கிலோமீட்டர். இதன் பரப்பளவு 510,10,00,000 சதுர கிலோமீட்டர்கள். இதிலும் மூன்றில் ஒரு பங்குதான் நிலம். மீதியோ கடலால் சூழப் பட்டுள்ளது.

## சூரியக் குடும்பம்

அடுத்து நம் முகவரியில் தொடர்வது நம் சூரிய குடும்பம். சூரிய குடும்பம் என்பது சூரியன் என்ற ஒரு நட்சத்திரத்தையும் அதனை வட்ட பாதையில் சுற்றிவரும் அனைத்து பொருள்களையும் குறிக்கும். நமுடைய சூரிய குடும்பத்தில் சூரியன் நமது நட்சத்திரமாக உள்ளது - 8 கிரகங்களும், அதனதன் துணைக்கோள்களும், குள்ள கிரகம் எனப்படும் (dwarf planet) புளூட்டோ ஒரு Dwarf Planet. மேலும் Ceres என்ற குள்ள கிரகங்கள் உள்ளன. இன்னும் asteroids எனப்படும் எரிகற்களும் மற்றும் Comets எனும் வால் நட்சத்திரங்களும் மற்றும் Meteoroids எனப்படும் விண்வீழ் கற்களும் நமது சூரிய குடும்பத்தில் உள்ளன. (சூரியன் என்பது நாம் விண்ணில் காணும் நட்சத்திரங்களில் ஒன்றுதான். நமக்கு அருகாமையில் உள்ளதால் அது நமக்கு பெரிதாகத் தெரிகிறது.) மேற்கண்ட படத்தில் சூரியனிலிருந்து மூன்றாவதாகத் தென்படும் பட்டாணி போன்ற உருவமே நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பூமி.




## ஒளியாண்டு

நம் சூரியனுக்கு அடுத்தது என்ன என்பதை அறியும் முன் ஒளியாண்டு பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியம். நாம் பொதுவாக தூரங்களை கிலோமீட்டரில் அளக்கிறோம். (நமக்குத் தெரியும் 1 கி.மீ. - 1,000 மீட்டர்)


விண்வெளியில் தூரம் அதிகம் என்பதால் கிலோமீட்டரில் சொல்ல இயலாது. கோடி, கோடி, கோடி என்று சொல்லவேண்டி இருக்கும் என்பதால் 'ஒளி ஆண்டு' என்ற அளவையை பயன்படுத்துகிறார்கள்.

ஒலி-(சப்தம்) 1 வினாடியில் பயணம் செய்யும் வேகம் 340 மீட்டர் ஆனால் ஒளி-(வெளிச்சம்) 1 வினாடியில் பயணம் செய்யும் வேகம் 3,00,000 கிலோமீட்டர். (3 லட்சம் கி.மீ). அப்படியென்றால் ஒரு வருடத்திற்கு (3,00,000 X 60 X 60 X 24 X 30 X 12) கிமீ. இந்த பெருக்குத்தொகைதான் ஒரே ஒருஒளி ஆண்டு. (ஏறக்குறைய 10 லட்சம் கோடி கிலோமீட்டர்)

- நமது சூரியனுக்கு அருகில் உள்ள நட்சத்திரக்குழு (Inter Stellar Neighborhood). ஆல்பா செந்தௌரி (Alpha Centauri) தான் சூரியனிலிருந்து அருகில் உள்ள நட்சத்திரம். சூரியனிலிருந்து ஆல்பா உள்ள தூரம் 4.24 ஒளி ஆண்டுகள். அதாவது இந்த ஆல்பா நட்சத்திரத்திலிருந்து புறப்படும் வெளிச்சம் நமது பூமிக்கு வந்து நம் கண்ணுக்கு தெரிய வேண்டும் என்றால் 4 வருடம் 3 மாதம் ஆகும். நாம் இங்கு காணும் அந்த நட்சத்திரத்தின் ஒளி 4.24 வருடத்திற்கு முன் புறப்பட்ட ஒன்றுதான். (சூரியனிலிருந்து வரும் ஒளி நம் பூமிக்கு 8 நிமிடத்தில் வருகிறது. நமக்கும் சூரியனுக்கும் 15 கோடி கிலோமீட்டர் தூரம்தான்.)

## பால்வெளி அண்டம் (Milky Way Galaxy) விண்மீன் திரள்

நம் சூரியன் போல 40,000 கோடி நட்சத்திரங்கள் உள்ளதுதான் நமது அடுத்த பெரிய குடும்பம். இதையே "பால்வெளி அண்டம் " (Milky Way galaxy) என்று அழைக்கிறோம். இக்குடும்பத்தில் உள்ள நட்சத்திரங்கள் மட்டும் மொத்தம் ஒரு லட்சம் ஒளி ஆண்டு தூரம் வரை பரவி இருக்கின்றன. 40,000 கோடி நட்சத்திரங்களில் ஒன்றே ஒன்றுதான் நம் சூரியன். அம்புக்குறி



காட்டும் ஒரு சிறு புள்ளிதான் நம் கிழக்கே உதிக்கும் சூரியன். அதற்க்குள்தான் நாம் வாழும் இப்பூவுலகும்! உங்கள் முகவரி எப்படி விரிவாகி உள்ளது என்பதை சற்று யோசித்துப் பாருங்கள்!

**பால்வெளி அண்டத்தில் பூமியும் சூரியனும் கேனிஸ் மஜோரிசும்**

● இந்த சூரியன் பால்வெளி அண்டத்தின் மையத்திலிருந்து 28,000 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளது. அந்த மையத்தை ஒரு முறை நம் சூரியன் குடும்பம் சுற்றிவர 25 கோடி வருடங்கள் ஆகும்!

● பால்வெளி அண்டத்தில் உள்ள 40,000 கோடி நட்சத்திரங்களில் ஒன்று V Y Canis Majoris. நம் பூமியில் இருந்து 5,000 ஒளி ஆண்டுகள் தூரத்தில் உள்ளது. இது சூரியனைவிடப் பன்மடங்கு பெரியது.

● நம் பூமியின் குறுக்களவு அதாவது விட்டம் – 12,756 கிலோமீட்டர்.

● நம்ம சூரியனின் குறுக்களவு-ஏறக்குறைய 14 லட்சம் கிலோமீட்டர். சூரியனிலிருந்து கிளம்பும் தீச்சுவாலையின் நீளம் மட்டுமே இரண்டரை லட்சம் கிலோமீட்டர்.

● 'Canis Majoris' நட்சத்திரத்தின் குறுக்களவு 198 கோடி கிலோமீட்டர்!

பால்வெளி அண்டத்திற்கு அருகில் உள்ள அண்டங்கள் (Local Galactic Group)

● நம் குடும்பத்துக்கு மிக அருகில் இருக்கக்கூடிய ஒரு சில குடும்பங்களை (அதாவது, விண்மீன் திரள்களை) இணைத்து ஒரு குழு ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதற்குப் பெயர் "Local Galactic Group"

● நமது பால்வெளி திரள் தவிர்த்து, மிக அருகில் உள்ள வேறு விண்மீன் திரள் குடும்பங்களில் M32 என்ற இலக்கம் கொண்ட விண்மீன் திரள் அண்ட்ரோமேடா 'Andromeda' முக்கியமானது. நமது பால்வெளி அண்டத்தைவிட "அண்ட்ரோமேடா" மிகப்பெரியது.

● நமது பால்வெளி அண்டத்தின் குறுக்களவு 1 லட்சம் ஒளி ஆண்டு தூரம். நட்சத்திரங்களின் எண்ணிக்கை 40,000 கோடி. (400 பில்லியன்)

● அண்ட்ரோமேடா விண்மீன் திரளின் குறுக்களவு 25 லட்சம் ஒளி ஆண்டுகள் தூரம். நட்சத்திரங்களின் எண்ணிக்கை 1 லட்சம் கோடி. (1 ட்ரில்லியன்)

**விர்கோ அண்டங்களின் தொகுப்பு (Virgo Super Cluster)**

● சுமார் 1 கோடி ஒளி ஆண்டுகள் இடைவெளியில் உள்ள நம் பால்வெளி அண்டம் போல உள்ள 100 விண்மீன் திரள்களின் தொகுப்பே விர்கோ அண்டங்களின் தொகுப்பு.

● இந்த இரண்டு தொகுப்புகளையும், இன்னும் பிறவையையும் உள்ளடக்கிய ஒரு மிகப்பெரிய தொகுப்பின் பெயர் "அண்மையிலுள்ள அண்டங்களின் பெருந் தொகுப்பு" (Local Super Clusters)

● இதுவரை நமது மனிதகுல வானியல் அறிவால் கண்டுபிடிக்க முடிந்த அண்டங்களின் ஒட்டுமொத்த தொகுப்பு. (Observable Universe) 9300 கோடி ஒளி ஆண்டுகள் தூரத்தை உள்ளடக்கியது.

● இவ்வளவு அண்டங்களின் தொகுப்பும் (Observable Universe) ஒட்டு மொத்த பேரண்டத்தில் எத்தனை சதவிகிதம் தெரியுமா? வெறும் 0.4 சதவிகிதம் மட்டுமே. முழுமையாக ஒரு சதவீதம் கூட இல்லை. அண்டங்களுக்கிடையேயான வாயு வெற்றிடம் வெளி 3.6 சதவீதமாகும். மீதி 96 சதவீதமும் அறிவியல் அறிவுக்குத் தட்டுப்படாத கரும்பொருளும் (23%dark matter) கருஞ்சக்தியும் (73% dark energy) ஆகும்.

எவ்வளவு விசாலமானது உங்கள் முகவரி? நீங்களோ உங்கள் கருமத்தம்பட்டிதான் எல்லாம் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்! இனி நாம் சிந்திக்க வேண்டிய விடயம்.. இப்பேரண்டத்தை பக்குவமாகப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் எவ்வளவு பிரம்மாண்டமானவன்! அவன் நம்மை வீணுக்காகப் படைத்திருப்பானா?

**51:47. நம்முடைய சக்தியைக் கொண்டே வானத்தை அமைத்தோம். நிச்சயமாக நாம் மிக்க விசாலமாக்கியும் வைத்திருக்கின்றோம்.**

இறைவனை மறுக்கும் நாத்திகர்களைப் பார்த்து இறைவன் கேட்கும் கேள்வி இங்கு கவனத்திற்குரியது:

**52:35. படைப்பாளன் யாருமின்றி தாமாகவே இவர்கள் பிறந்துவிட்டார்களா? அல்லது இவர்கள் தங்களுக்குத் தாங்களே படைப்பாளர்களாய் இருக்கின்றார்களா?**

**52:36. அல்லது வானங்களையும் பூமியையும் இவர்கள் படைத்துள்ளார்களா? உண்மை யாதெனில், இவர்கள் உறுதியான நம்பிக்கை கொள்வதில்லை!**

மறுமையில் மனிதனை இறைவன் மீண்டும் உயிர்கொடுத்து எழுப்புவான் என்பதை நம்பாதவர்களைப் பார்த்து இறைவன் கேட்கும் கேள்வி இங்கு கவனத்திற்குரியது.

**36:81. வானங்களையும் பூமியையும் படைத்தவன், அவர்களைப் போன்றவர்களைப் படைக்கச் சக்தியற்றவனா? ஆம் (சக்தியுள்ளவனே!) மெய்யாகவே, அவனே (பல வகைகளையும்) படைப்பவன் யாவற்றையும் நன்கறிந்தவன்.**

**36:82. எப்பொருளையேனும் அவன் (படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் “குன்” (ஆய்விடுக) என்று கூறுவதுதான் உடனே அது ஆகிவிடுகிறது.**

**36:83. ஆகவே, எல்லாப் பொருட்களின் ஆட்சியும் எவன் கையிலிருக்கிறதோ அவனே மிகத் தூய்மையானவன், அவனிடமே நீங்கள் மீள்விக்கப்படுவீர்கள்.**

# பிரார்த்தனைகள் ஏற்கப்படும் நேரம்

● இறைத்தூதரே! இறைவனிடம் மிகவும் ஏற்று கொள்ளப்படுவதற்கு தகுதிவாய்ந்த துஆ (பிரார்த்தனை) எது? என்று கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “கடைசி இரவின் நடுப்பகுதியிலும், பர்லான தொழுகைகளுக்குப் பிறகும் கேட்கப்படும் துஆ” என்றார்கள்.

(அபூ உமாமா(ரழி) திர்மிதீ)

# பிழையான நாத்திக வாதம்!

கண்டம் விட்டு கண்டங்களுக்கு பறந்து செல்லும் விமானத்திற்கு ஒரு படைப்பாளன் இருக்கிறான் என்று நாம் ஒப்புகொள்கிறோம். இதைப் போலவே வானொலி, கணினி, தொலைபேசி, பேருந்து, ஊதுபத்தி, தீப்பெட்டி, குண்டூசி என சிறிதும் பெரிதுமான ஏராளமான நாம் அன்றாடம் புழங்கும் பொருட்களின் பின்னால் அறிவும் ஆற்றலும் அனுபவமும் திட்டமிடலும் படைப்பாளனும் இருப்பதை ஒப்புக்கொள்ளாதவர்கள் இல்லை. ஆனால் மனிதனும், மற்ற ஜீவராசிகளும் வாழ்கின்ற இந்த பூமியும் அது சார்ந்துள்ள சூரிய குடும்பமும் அது போன்ற எண்ணற்ற குடும்பங்களைக் கொண்டுள்ள கட்டுகோப்பாக இயங்கி கொண்டிருக்கும் இந்த இம்மாபெரும் பிரபஞ்சத்திற்குப் பின்னால் ஒரு படைப்பாளன் இருக்கிறான் என்பதை நம்மில் ஒரு சாரார் ஒப்புகொள்வதில்லை!

அவர்கள் கூறும் காரணம் "என்னுடைய கண்ணுக்கு தெரியாத ஒருவனை எப்படி கடவுளாக என்னால் ஏற்றுகொள்ள முடியும்?" என்பதே. இந்த நாத்திகர்களில் பலர் தங்களையே பகுத்தறிவுவாதிகள் என்றும் கூறிக்கொள்கிறார்கள். உண்மையில் நமது புலன்களுக்கு எட்டும் தகவல்களை (sensible data) வைத்து எட்டாதவற்றைப் பகுத்து அறிவதே பகுத்தறிவு எனப்படும்.

**பகுத்தறிவின் விந்தை:**

ஆறறிவு கொண்ட மனிதனும் ஐந்தறிவு கொண்ட மிருகமும் வாழ்ந்து வந்த வாழ்க்கை முறையை ஒப்பிட்டு பார்த்தாலே நம்முடைய பகுத்தறிவின் மகத்துவத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். மிருகம் இன்று எவ்வாறு காட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்றதோ இதே போன்றுதான் 200 வருடங்களுக்கு முன்பும் எந்த மாற்றமும் இல்லாமல் வாழ்ந்தது. ஆனால் மனிதனுடைய இன்றைய வாழ்விற்கும் 200 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த வாழ்விற்கும் மிகப்பெரிய வளர்ச்சி வித்தியாசம் உண்டு. அவ்வளவு சக்தி வாய்ந்தது நம்முடைய சிந்தனை என்னும் பகுத்தறிவு!

**பகுத்தறிவின் பயன்பாடு:**

இந்த சக்திவாய்ந்த சிந்தனை என்னும் பகுத்தறிவைக் கொண்டுதான நம்முடைய அன்றாட வாழ்கையில் பெரும்பாலான முடிவுகளை நாம் எடுக்கின்றோம். உதாரணமாக, நான் உங்களை என் வீட்டு விருந்து ஒன்றில் கலந்து கொள்ள அழைக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள், இந்த விருந்தில் கலந்து கொள்ளலாமா வேண்டாமா என்று எந்த அறிவை வைத்து முடிவு செய்வீர்கள்?

- பார்வை என்ற அறிவை கொண்டு விருந்திற்கான உணவு சமைப்பதை பார்த்து உறுதி செய்துவிட்டு, கலந்துகொள்ள முடிவு செய்வீர்களா? அல்லது
- செவி என்னும் அறிவை கொண்டு, உணவு சமைப்பதன் சப்தத்தை உறுதி செய்து கொண்டு, விருந்தில் கலந்துகொள்ள முடிவு செய்வீர்களா? அல்லது
- வாசனை என்னும் அறிவை கொண்டு, உணவு சமைப்பதின் வாசனையை நுகர்ந்துவிட்டு, விருந்தில் கலந்துகொள்ள முடிவு செய்வீர்களா? அல்லது

• இதுபோன்றே சுவைத்தல் அல்லது தொடுதல் என்னும் ஐந்து அறிவுகளை கொண்டு உறுதி செய்துவிட்டு, விருந்தில் கலந்துகொள்ள முடிவு செய்வீர்களா?

எதுவுமே இல்லைதானே?

ஒருவர் நம்மை விருந்தொன்றிற்கு அழைக்கிறார் என்றால், ஒரு குறிபிட்ட நாளன்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பல வகையான உணவு வகைகள் தயார் செய்யப்பட்டு பரிமாறப்படும் என்று நம்முடைய சிந்தனை என்னும் ஆறாம் அறிவு நமக்கு சொல்கிறது, அதை வைத்து நாமும் அதில் கலந்து கொள்ள முடிவு செய்து அதற்கு தயார் ஆகின்றோம். இதுமட்டுமல்லாமல் நாம் நம்முடைய அன்றாட வாழ்கையில் நிகழ்த்தும் எந்த காரியம் ஆனாலும் அதை செய்யலாம் அல்லது செய்யக்கூடாது, இந்த இடத்திற்கு போகலாம், அல்லது போகக்கூடாது, இவற்றைப் பெறலாம், அல்லது பெறக்கூடாது என்று முடிவு செய்வதே பெரும்பாலும் நம்முடைய ஆறாம் அறிவை கொண்டுதான். இப்படி நம்முடைய அன்றாட வாழ்வில் நிகழும் சின்னஞ்சிறு நிகழ்வுகளுக் கெல்லாம் சிந்தனை என்னும் பகுத்தறிவை கொண்டு முடிவு செய்யும் பொழுது கடவுளை ஏற்றுகொள்ள மட்டும் ஆறாம் அறிவைகொண்டு சிந்திப்பதை விட்டுவிட்டு, ஐந்தறிவில் ஒன்றான பார்வைக்கு புலப்படவில்லை என்று சொல்லி கடவுளை நிராகரிப்பது எவ்வாறு பகுத்தறிவாகும்?

## ஐந்தறிவு ஜீவிகளும் பகுத்தறிகின்றன!

இன்னும் சொல்லப்போனால் ஐந்தறிவு ஜீவராசிகள்கூட அவற்றின் மட்டத்தில் பகுத்தறிவை பயன்படுத்தியே வாழ்வதை நாம் காணாம். உதாரணமாக ஆடு ஒன்றை எடுத்துகொள்ளுங்கள்... அதற்கு உணவு (இலைதழைகளை) கொடுபதற்காக “வா” என்று அழைத்தால் அது வருமா? நிச்சயம் வராது! அதை சாப்பிட அழைக்க வேண்டுமானால் நாம் அதன் உணவான இலைதழைகளை அதற்கு காண்பிக்க வேண்டும், அது கண்ணால் பார்த்தும் மோப்பம் பிடித்தும் காண்பிக்கப்படுவது தன் உணவுதான் என்பதைப் பகுத்தறிந்து விளங்கிக்கொண்டு அந்த இலைதழைகளை உண்ண வரும். இயற்கையில் நாம் காணும் மனிதனல்லாத அனைத்து ஜீவிகளிடமும் இந்த நடைமுறையைக் காணலாம்.

ஆனால் ஐந்தறிவு ஜீவிகளை விட அதிகமான அறிவையும் சிந்தனா சக்தியையும் கொண்டிருக்கக்கூடிய மனிதன் கண்ணால் கண்டால்தான் கடவுளை நம்புவேன் என்று அடம் பிடிப்பது இயற்கைக்குப் புறம்பானதும் பகுத்தறிவுக்கு இழுக்கும் ஆகும்.

## இறைவனைக் காண வேண்டும் என்ற வாதம்

ஒரு மாபெரும் தூசுப் படலத்தில் காணப்படும் ஒரு நுண்ணிய துகள் போன்றது இன்று நாம் வாழும் பூமி என்ற கோளம். இதன்மீது ஒட்டிக்கொண்டு இருக்கும் மற்றொரு நுண்ணிய துகள் போன்றவர்கள் நாம். நமது கண்களுக்குப் புலப்படும் மிகச் சிறிய தூசு சுமார் 5-10 மைக்ரான் அளவு இருக்கும். ஒரு மீட்டரின் பத்து லட்சம் பகுதியில் ஒன்றுதான் மைக்ரான். பூமியை ஒரு தூசு எனக் கொண்டால் அறிவியல் உபகரணங்களின் பார்வைக்கு எட்டிய பிரபஞ்சம் (observable universe)

ஐந்தாயிரம் கோடி கி.மீ. ஆக இருக்கும்.

ஒட்டு மொத்தப் பேரண்டத்தில் வெறும் 0.4 சதவிகிதம் மட்டுமே மேற்படி அறிவியலின் பார்வைக்கு எட்டிய பிரபஞ்சம். முழுமையாக ஒரு சதவீதம் கூட இல்லை. அண்டங்களுக்கிடையேயான வாயு வெற்றிடம் வெளி 3.6 சதவீதமாகும். மீதி 96 சதவீதமும் அறிவியல் அறிவுக்குத் தட்டுப்படாத கரும்பொருளும் (23%dark matter) கருஞ்சக்தியும் (73% dark energy) ஆகும். இப்படிப்பட்ட பிரபஞ்சத்தைப் படைத்து குறையின்றி பரிபாலித்து வருபவனையே நாம் கடவுள் அல்லது இறைவன் என்று அழைக்கிறோம்.

இவ்வளவு பெரிய பிரபஞ்சத்தில் அதில் ஒரு பால்வெளியில், அந்த பால்வெளியில் உள்ள ஒரு சூரிய குடும்பத்தில், அந்த குடும்பத்தில் உள்ள பூமி என்னும் ஒரு கிரகத்தில், அந்த கிரகத்தில் உள்ள ஒரு கண்டத்தின் ஒரு மூலையில் வசிக்கும் ஆறடி மனிதனுடைய கண்ணுக்கு கடவுள் தென்பட வேண்டும் என்பது, நகை கடையில் உள்ள மிக குறைந்த அளவுகளான 1mg, 1g, 10gm போன்ற எடை நிறுத்தும் தராசில் 50kg எடையை அளக்க முயற்சிப்பதாகும்!

இந்த மனமுரண்டான போக்கு இவர்களை எங்கு கொண்டு செல்லும்? இறைவனுக்கு சொந்தமான இப்பிரபஞ்சத்தில் வாழ்ந்துக்கொண்டு அந்த இறைவனையும் அவனது வேதத்தையும் தூதர்களையும் மறுத்ததற்காக மறுமையில் நரகத்தையே அடைகிறார்கள்.

● **10:4. நீங்கள் அனைவரும் அவனிடமே மீண்டு செல்ல வேண்டியிருக்கிறது் அல்லாஹ்வின் வாக்குறுதி மெய்யானது - நிச்சயமாக அவன்தான் முதல் முறையாகப் படைத்தவன் இறைநம்பிக்கை கொண்டு நேர்மையான முறையில் நற்கருமங்கள் செய்தவர்களுக்கு கூலி வழங்குவதற்காக படைப்பினங்களை மீண்டும் உயிர்ப்பிப்பான். யார் நிராகரித்து விட்டார்களோ அவர்களுக்கு அவர்கள் நிராகரித்த காரணத்தினால் கொதிக்கும் நீரும் நோவினைத் தரும் வேதனையும் உண்டு.**

நன்றி: காஜா மைதீன்

# நபிகளாரின் மகன் இறந்தபோது..

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகன் இப்ராஹீம் மரணத்தை நெருங்கிய போது நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அவரைப் பார்க்கச் சென்றோம். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.

அப்போது நபித்தோழர் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ‘இறைத்தூதரே! நீங்களுமா?’ என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ‘அவ்ஃபின் மகனே! இது இரக்க உணர்வு’ என்று கூறி விட்டு வேறு வார்த்தையில் பின் வருமாறு விளக்கினார்கள்.

‘கண்கள் கண்ணீர் வடிக்கின்றன் உள்ளம் கவலைப்படுகிறது் நமது இறைவன் பொருந்திக் கொள்ளாத எதையும் நாம் கூற மாட்டோம். இப்ராஹீமே! உமது பிரிவுக்காக நாம் கவலைப்படுகிறோம்’ என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர்: அனஸ் (ரலி) நூல்: புகாரி 1303*

# மோசடிக்காரர்கள் நாசம் அடைவர்!

கடவுள் வழிபாடு என்பதை ஒரு தனி சடங்காகக் கற்பித்து வாழ்வின் மற்ற துறைகளில் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளலாம் என்று கற்பிப்பவை மனிதர்களால் உண்டாக்கப்பட்ட மதங்கள். கடவுளுக்கென்று சில சடங்குகளையும் காணிக்கைகளையும் செய்தால் எப்படிப்பட்ட பாவங்களுக்கும் பரிகாரம் ஆகிவிடும் என்று மூடமாக அவை கற்பிப்பதால் மனிதர்கள் மேலும்மேலும் பாவங்களில் ஈடுபட அவை ஏதுவாகின்றன. கடவுளின் பெயரால் ஏய்த்துப் பிழைக்கும் இடைத்தரகர்களையும் அவை வளர்த்து விடுகின்றன.

ஆனால் உண்மை இறை மார்க்கம் என்பது மதங்கள் என்று அறியப்படும் வீண்சடங்குகளின் தொகுப்பு அல்ல, இடைத்தரகர்களுக்கு இடமளிப்பதும் அல்ல. ஆன்மீகத்தை மனித வாழ்விலிருந்து பிரிப்பதும் அல்ல. மாறாக அது படைத்த இறைவனின் வழிகாட்டுதலின் படி அமைந்த ஒரு முழுமையான வாழ்க்கை நெறி. மனித வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டுவது. மனித சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் போதிப்பதோடு அனைத்துத் தரப்பினரதும் உரிமைகளை நிலைநாட்டக் கூடிய சாசனங்களையும் அறிவுறுத்தல் களையும் உட்கொண்டது. வாழ்க்கை முழுக்க இறைவனின் எவல்விலக்கல்களைப் பேணி வாழ்வதே இறைபொருத்தத்தைப் பெற்றுத்தரும் என்றும் அவற்றை மீறுவோருக்கு மறுமையில் இறைவனிடம் தண்டனைகள் காத்திருக்கின்றன என்றும் இம்மார்க்கம் கற்பிப்பதால் மக்களுக்கிடையே கொடுக்கல் வாங்கல்கள், வியாபாரம், ஒப்பந்தங்கள், உறவுகள் அனைத்திலும் நேர்மை பேணும் பண்பு அங்கு உடலெடுக்கிறது.

கொடுக்கல் வாங்கல்களில் வியாபாரங்களில் உடன்படிக்கைகளில் அளவு மோசம் செய்பவர்களை நோக்கி விடுக்கப்படும் இறைவனின் எச்சரிக்கைகளைப் பாருங்கள்:

**83:1-3 அளவில் மோசடி செய்பவருக்குக் கேடுதான்! அவர்கள் எத்தகையோர் என்றால், மக்களிடமிருந்து அளந்து வாங்கும்போது நிறைவாக வாங்குகின்றார்கள். அவர்களுக்கு அளந்தோ, நிறுத்தோ கொடுக்கும்போது குறைத்துக் கொடுக்கின்றார்கள்.**

**83:4.-6 திண்ணமாக, அவர்கள் ஒரு மாபெரும் நாளில் எழுப்பிக் கொண்டுவரப்படவிருக்கின்றார்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லையா? ... ஒரு மாபெரும் நாளில், அந்நாளில், அனைத்துலகின் அதிபதியின் முன்னால் மாந்தர்கள் அனைவரும் நின்றுகொண்டிருப்பார்கள்.**

தொழுகை நோன்பு போன்ற ஆன்மீக சடங்குகளை எவ்வளவுதான் பக்குவமாக ஒரு மனிதன் நிறைவேற்றினாலும் அவனது கொடுக்கல் வாங்கல்களில் நேர்மை பேணப்படவில்லை என்றால் அவனுக்கு அந்த ஆன்மீக சடங்குகளால் பயனில்லை. மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று இறைவனிடம் என் அத்துமீறல்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வை உண்டாக்குவது தொழுகையின் நோக்கங்களில் முக்கியமான ஒன்றாகும்.

## நபிகளாரின் முன்மாதிரி நடவடிக்கைகள்

*நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வெறும் போதனைகளோடு நிறுத்தி விடாமல் தான் போதிப்பதை தனது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள். நேர்மை பேணக்கூடிய ஒருசமுதாயத்தையே உருவாக்கவும் செய்தார்கள். மோசடி எந்த உருவத்தில் வந்தாலும் அதை உடனடியாகக் கண்டித்துத் திருத்தினார்கள்.*

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒரு உணவுக் குவியலைக் கடந்து சென்றார்கள். அதிலே தன் கையை நுழைத்தார்கள். அவர்களுடைய விரல்களில் ஈரம் பட்டது. (அந்த உணவுக்காரரைப் பார்த்து) "உணவுக்குச் சொந்தக்காரரே! இது என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "இறைத்தூதரே! மழை நீர் இதில் விழுந்து விட்டது" என்று கூறினார். அதற்கு அவர்கள், "மக்கள் பார்க்கும் வண்ணம் இதை உணவுப் பொருளுக்கு மேலே வைத்திருக்க வேண்டாமா? யார் ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்ல!" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபுஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம் 164

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மோசடி செய்பவனுக்கு மறுமை நாளில் (அவனுடைய மோசடியை வெளிச்சமிட்டுக் காட்டும் முகமாக அடையாளக்) கொடி ஒன்று நாட்டப்பட்டு, 'இது இன்னாருடைய மகன் இன்னாரின் மோசடி' என்று கூறப்படும். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) நூல்: புகாரி 6177

*வியாபாரிகள் மற்றும் குடிமக்களிடம் மட்டுமல்ல, அரசு அதிகாரிகள் தவறு செய்யும்போதும் தவறாமல் கண்டித்தார்கள்.*

● 'நபி (ஸல்) அவர்கள் 'அஸ்த்' என்னும் குலத்தைச் சேர்ந்த ஒரு மனிதரை (ஸகாத்) வசூலிப்பவராக நியமித்தார்கள். அவர் 'இப்னுல் லுத்பிய்யா' என்று அழைக்கப்பட்டு வந்தார். அவர் ஸக்காத் வசூலித்துக் கொண்டு வந்த போது 'இது உங்களுக்குரியது, இது எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது' என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'இவர் தன் தகப்பனின் வீட்டில் அல்லது தாயின் வீட்டில் உட்கார்ந்து கொண்டு, தமக்கு அன்பளிப்பு கிடைக்கிறதா இல்லையா? என்று பார்க்கட்டுமே! என் உயிரைத் தன் கைவசம் வைத்திருப்பவன் மீது சத்தியமாக உங்களில் யாரேனும் அந்த 'ஸகாத்' பொருளில் இருந்து (முறைகேடாக) எதைப் பெற்றாலும் அதை அவர் மறுமை நாளில் தன் பிடரியில் சுமந்து கொண்டு வருவார். அது ஒட்டகமாக இருந்தால் கனைத்துக் கொண்டிருக்கும், மாடாகவோ ஆடாகவோ இருந்தால் கத்திக் கொண்டிருக்கும்' என்று கூறினார்கள். பிறகு, அவர்களுடைய அக்குள்களின் வெண்மையை நாங்கள் பார்க்கும் அளவுக்குத் தம் கைகளை உயர்த்தி 'இறைவா! (உன் செய்தியை மக்களுக்கு) நான் எடுத்துரைத்து விட்டேன் அல்லவா? நான் எடுத்துரைத்து விட்டேன் அல்லவா? என்று மூன்று முறை கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுமைத் அஸ்ஸாஇதீ (ரலி) நூல்: புகாரி 2597, 6636, 6679)

## நேர்மையாளருக்கு இறைவனே கூட்டாளி!

● இறைவன் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரண்டு கூட்டாளிகளில் ஒருவர் தன்னுடைய தோழருக்கு மோசடி செய்யாத வரை நான் அவர்களுடன் மூன்றாவது (கூட்டாளி) ஆவேன். ஆனால் மோசடி செய்தால் அவ்விருவரிடமிருந்து நான் வெளியேறி விடுகிறேன். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: அபூதாவூத் 2936

# வணிகமும் வணக்கமே!

இஸ்லாம் என்பது ஆன்மீக சடங்குகளின் தொகுப்பல்ல. மாறாக இறைவனின் எவல்விலக்கல்களை வாழ்வின் அனைத்துத்துறைகளிலும் பேணி அதன்படி வாழ்வதே. அந்த வகையில் இறைவன் ஏவியபடி நேர்மையாக செய்யப்படும் வணிகமும் இறைவன் தடுத்தவற்றில் இருந்து விலகி இருத்தலும் இறைவணக்கமாகவே கருதப்படும்.

● **அன்றியும், உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருளைத் தவறான முறையில் சாப்பிடாதீர்கள் மேலும், நீங்கள் அறிந்து கொண்டே பிற மக்களின் பொருள்களிலிருந்து(எந்த) ஒரு பகுதியையும், அநியாயமாகத் தின்பதற்காக அதிகாரிகளிடம் (இலஞ்சம் கொடுக்க) நெருங்காதீர்கள். (திருக்குர்ஆன் 2:188)**

● **நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள் நீங்கள் இறைவன்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், இறைவனுக்கு நன்றி செலுத்தி வாருங்கள். (திருக்குர்ஆன் 2:172)**

● ”ஒருவன் ஒரு சத்தியம் செய்து அதன் காரணமாக மற்றொரு முஸ்லிமுடைய சொத்தைப் பறித்துக் கொண்டு, அதில் அவன் பொய்யனாக இருப்பின், மறுமையில் அவன் மீது கோபமாக இருக்கும் நிலையில் இறைவனைச் சந்திப்பான்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அஷ்ஆஸ் இப்னு கைஸ் (ரலி) புஹாரி, முஸ்லிம்).

● நபி (ஸல்) அவர்கள் “ஒரு நம்பிக்கையாளர் மற்றொரு நம்பிக்கையாளரின் சகோதரர் ஆவார். தன் சகோதரரின் வியாபாரத்தில் குறுக்கிட்டு வியாபாரம் பேச ஒரு நம்பிக்கையாளருக்கு அனுமதியில்லை” என்று கூறினார்கள்.

(உக்பா இப்னு ஆமிர் (ரலி) இப்னுமாஜா, அஹ்மத்)

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ”தாம் சம்பாதித்தது ஹலாலா ஹராமா என்று மக்கள் பொருட்படுத்தாத ஒரு காலம் (இனி) வரும்!” (அபூஹுரைரா(ரலி) ஸஹீஹ் புகாரி)

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உண்மை பேசி, நாணயத்துடன் நடந்து கொள்ளும் ஒரு வணிகர் மறுமை நாளில் நபிமார்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள் ஆகியோருடன் இருப்பார்” என்று கூறினார்கள். (அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) திர்மிதீ).

● **அமானிதங்களை (நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருட்களை) அதற்கு உரியோரிடம் ஒப்படைக்குமாறும், மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது நீதியாக நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் இறைவன் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். இறைவனின் இந்த அறிவுரை உங்களுக்கு மிகவும் நல்லது. இறைவன் செவியுறுபவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 4:58)**

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நயவஞ்சகனின் அடையாளம் மூன்று. அவன் பேசினால் பொய் பேசுவான். வாக்களித்தால் மாறு செய்வான். நம்பப்பட்டால் மோசடி செய்வான். அபூஹுரைரா (ரலி) நூல்கள்: புகாரீ, முஸ்லிம் (89)

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் (மக்களிடம்) "திவாலாகிப் போனவன் பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், "யாரிடத்தில் பொற்காசுகளும் இன்னும் எந்தப் பொருளும் இல்லையோ அவன்தான் திவாலானவன்" என்று கூறினார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "என்னுடைய சமுதாயத்தில் திவாலானவன் யாரென்றால் மறுமை நாளில் தொழுகை, நோன்பு, ஜகாத்துடன் வருவான். (உலகில் வாழும் போது) இவனை இட்டிகட்டியிருப்பான். இவனைத் திட்டியிருப்பான். இவனது இரத்தத்தை ஓட்டியிருப்பான். இவனை அடித்திருப்பான். எனவே இவனுக்கு அவனுடைய நன்மைகளிருந்து எடுத்துக் கொடுக்கப்படும். அவன் மீது கடமையாக உள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு முன்பே அவனது நன்மைகள் அழிந்து விட்டால் அவர்களுடைய தீமைகளிருந்து எடுத்து அவன் மீது வைக்கப்படும். பிறகு அவன் நரகில் வீசப்படுவான்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம்

**● மனிதர்களே! பூமியில் உள்ளவற்றில் அனுமதிக்கப்பட்ட தூய்மையானதை உண்ணுங்கள்! ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்! அவன் உங்களுக்குப் பகிரங்க எதிரி. (அல்குர்ஆன் 2:168)**

**● நம்பிக்கை கொண்டோரே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையானவற்றை உண்ணுங்கள்! நீங்கள் இறைவனையே வணங்குவோராக இருந்தால் அவனுக்கே நன்றி செலுத்துங்கள்! (அல்குர்ஆன் 2:172)**

அமானிதங்களைப் பேணாதவர்கள் மறுமை நாளில் நரகத்தின் மீதுள்ள பாலத்தைக் கடக்கும் போது அவர்களைக் கடக்க விடாமல் இந்த அமானிதம் தடுக்கும்.

● (மறுமையில்) மக்கள் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் செல்வார்கள். உடனே அவர்கள் எழு(ந்து பரிந்துரைக்க அனுமதி கோரு)வார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். அப்போது நம்பகத்தன்மையும் இரத்த பந்த உறவும் அனுப்பி வைக்கப்படும். அவையிரண்டும் (நரகத்தின் மீதுள்ள) அப்பாலத்தின் இரு மருங்கிலும் வலம், இடமாக நின்று கொள்ளும். அப்போது உங்களில் முதல் அணியினர் மின்னலைப் போன்று அதைக் கடந்து செல்வார்கள். (அறிவிப்பவர்: அபுஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம் 329)

# பதவி ஓர் அமானிதம்

● 'நீங்கள் ஆட்சிப் பதவியை அடைய ஆசைப்படாதீர்கள். ஆனால் மறுமை நாளிலோ அதற்காக வருத்தப்படுவீர்கள்' - நபிமொழி
அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி 7148

● இறைத்தூதரே! என்னை நீங்கள் பதவிக்கு நியமிக்க மாட்டீர்களா? என்று நான் கேட்ட போது அவர்கள் தன் கையால் என் தோளைத் தட்டி விட்டு 'அபூதர்ரே! நீ பலவீனமானவன். ஆனால் பதவி (அதிகாரம்) என்பதோ அமானிதமாக இருக்கிறது. யார் அப்பதவிக்கு வந்து பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றுகிறாரோ அவர் தவிர ஏனையோருக்கு அது இழிவையும் வருத்தத்தையுமே கொடுக்கும்' எனக் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஆபூதர் (ரலி), நூல்: முஸ்லிம் 1825)

# ஆறடி மனிதா உன் விலையென்ன?

அமெரிக்க நகரம் ஒன்றில் அன்று ஒரு கருத்தரங்கு... "தூய்மையான ஒரு சமுதாயத்தை உருவாக்க இறைவன், மதம் ஆகியவற்றின் அவசியம்" என்னும் தலைப்பில் ஒரு பாதிரியார் மாணவர்களிடம் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

துடிப்புள்ள ஒரு மாணவன் எழுந்து பின்வரும் கேள்வியை வீசினான், "ஐயா, நான் 'மதச்சார்பற்ற மனிதத்தன்மை' எனும் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டுள்ளேன். மனித குலத்துக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன். எல்லா விதமான தீமைகளிருந்தும் விலகி நிற்கின்றேன் எவருக்கும் தொல்லை கொடுபதில்லை யாரையும் மோசடி செய்வதில்லை பொய்யுரைபதில்லை திருடுவதில்லை இயன்றவரை மற்றவர்களுக்கு உதவி செய்கின்றேன், பலவீனமானவர்களுக்கு அறுதல் அளிகின்றேன், சுருக்கமாகக் கூறினால் நன்மையை விரும்புகிறேன் தீமையை வெறுக்கிறேன் நற்செயல்களைப் புரிய, தீமைகளைத் தடுக்க, மனிதர்களிடம் உயர்ந்த பண்புகளை தோற்றுவிக்க, ஒரு சிறந்த தூய்மையான சமுதாயத்தை உருவாக்க என்னுடைய நடைமுறையும், கொள்கையும் போதுமானவையாகும். இதற்காகக் கடவுள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

மாணவனின் இக்கேள்விக்கு பாதிரியார் பல பதில்கள் தந்தார். இறைவன் இருக்கிறான் என்பதைப் பற்றியும், அவன் மீது திடமான நம்பிக்கை கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் பல ஆதாரங்களை எடுத்துரைத்தார். ஆயினும் பாதிரியார் கூறிய பின்வரும் உவமானம் மிகவும் சிந்தனைக்குரியதாக அமைந்தது:

- இரண்டாம் உலகப் போரின்போது பனாமாக் கால்வாயின் வடக்கிலிருந்து தெற்கு பகுதிக்குப் பருத்தி போககூடாது என்று அமெரிக்க அரசு தடை விதித்திருந்தது. அங்கு சாவடிகளையும் அமைத்து, இந்தத் தடையை யாரும் மீறாதிருக்க அதிகாரிகளையும் நியமித்திருந்தது.

வடபகுதியிலிருந்து வந்து கொண்டிருந்த பருத்தி தடை செய்யப்பட்டு விட்டதால் , தென்பகுதியில் பருதியின் விலை கிடுகிடுவென பலமடங்கு உயர்ந்து விட்டது. பனாமாக் கால்வாயின் இருபகுதியுலும் பருத்தியின் விலையில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது. இதைப் பார்த்த சில வியாபாரிகளுக்கு பேராசை உண்டாயிற்று. 'திருட்டுத்தனமாகப் பருத்தியைப்பனாமாக் கால்வாய் வழியாக கடத்திச் செல்லலாம் அரசு அதிகாரிகள் பிடித்தால் இலஞ்சம் கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்' என்று அவ்வியாபாரிகள் திட்டமிட்டனர்.

திட்டத்தின்படி வியாபாரிகளின் ஒரு குழு படகில் பருத்தியை ஏற்றிக்கொண்டு தென்திசையை நோக்கிச் சென்றது. இந்தக் குழு சோதனைச் சாவடியை நெருங்கியது, அதிகாரிகளிடம் பேசி விவகாரத்தை முடித்துக் கொள்ள சாவடிக்குள் வியாபாரிகள் சென்றனர்.

அப்பொழுது அங்கு நியமிக்கப்படிருந்த அதிகாரி மிகவும் நேர்மையானவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டவர் வாய்மையுடன் சட்டத்தைக்

கண்காணிக்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டவர் அதை நடைமுறையிலும் பின்பற்றுபவர்.

வியாபாரிகள் அவரைச் சந்தித்து "நாங்கள் இவ்வழியில் தடை விதித்திருப்பதை அறியாமல் பருத்தியைக் கொண்டுவந்து விட்டோம் இதை எடுத்துச் செல்ல அனுமதி தாருங்கள்" என்று கெஞ்சினார்கள்.

"கண்டிப்பாக அனுமதியளிக்க முடியாது!" என்று அதிகாரி பதில் கூறிவிட்டார் .

பிறகு அவர்கள் அதிகாரிக்கு 'ஏதேனும்' தருவதாக ஆசைகாட்டினார்கள். ஆனால் தங்களின் இம்முயற்சிகள் பலிக்கப் போவதில்லை என்பதை உணர்ந்த அவர்கள் பேரம் பேசத் தொடங்கினார்கள். ஏலத்தில் விலை குறிப்பதைப் போல அவர்கள் படிப்படியாக பேரத்தை அதிகப்படுத்திக் கொண்டே வந்தார்கள்.

பேரம் மேலும் சூடு பிடித்தது. 6000, 10,000, 20,000, 40,000 என்று பேரம் தொடர்ந்தது. அதிகாரி கண்டிப்பு காட்டக் காட்ட ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கும் பேரம் ஏறிக் கொண்டே சென்றது. 50,000 டாலர்கள் தருகிறோம் என்றார்கள். வியாபாரி ஒருவர் துணிந்து, ஒரு இலட்சம் டாலர் தருவதாக ஒரேயடியாகத் தாவி விட்டார் .

**மனப்போராட்டம்**

இதைக் கேட்டதும் சுங்க அதிகாரியின் உணர்ச்சிகள் பொங்கின் பலவிதமான சிந்தனைகள் அவர் உள்ளத்தில் உதித்தன . "வாழ்நாள் முழுவதும் நேர்மையில் நிலைதிருந்தாய் சட்டத்துக்கு உட்பட்டிருந்தாய்! இன்று அந்தத் தூய வழிமுறையைக் கைவிட்டு விடப் போகிறாயா?" என்று அவர் மனசாட்சி இடித்துரைத்தது.

"இன்று உன்னுடைய ஊதியம்தான் என்ன என்பதை எண்ணிப் பார்! இப்பொழுது உன்னை எந்த மேலதிகாரி பார்த்துக் கொண்டிருக்கிறார்? "சரி" என்று ஒரு வார்த்தை சொல்லி இலட்சம் டாலர்களின் உரிமையாளனாக மாறி விடு. அது மட்டுமல்ல , நாளை மேலும் பல வாய்புகள் வரலாம். உன்னுடைய கையில் மேலும் செல்வம் குவிந்து கொண்டே வரும்! அந்தச் செல்வமோ மிக அதிகமாகும். கற்பனையிலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு செல்வம் உன் காலடியில் வந்து விழும். உன் வாழ்நாள் முழுவதும் நீ சம்பாதிக்கும் வருமானத்தை விட, பல மடங்கு அதிகமான இந்தத் தொகையைச் சில வினாடிகளில், சில நாள்களில் நீ அடைந்து விடலாம். வறட்டுத் தத்துவத்தில் உழலாதே் இந்தப் பொன்னான வாய்ப்பை நழுவ விடாதே!" என்று பல ஆசைகளைக் காட்டி அவருடைய மன இச்சைகளும் ஷைத்தானும் அவரை மயக்கி மறுதிசையில் இழுத்தன.

இவ்வாறு மனசாட்சிக்கும் மன இச்சைக்கும் இடையில் அவரின் உள்ளத்தில் கடும் போர் நிகழ்ந்தது. அவருடைய மூச்சு திணறத் தொடங்கியது. "பாவிகளே, நீங்கள் என்னை விலை கொடுத்து வாங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே" என்று முழங்கிக் கொண்டே வியாபாரிகளை அறையிலிருந்து வெளியே தள்ளிக் கதவுகளை ஓங்கி

அடைத்துவிட்டார் அந்த அதிகாரி.

இதைச் சொல்லிய பாதிரியார், மதசார்பற்ற மனிதத்தன்மையில் நம்பிக்கை கொண்டு கேள்வி கேட்ட அந்த மாணவரை நோக்கிப் பின்வருமாறு கூறினார் :

"நேர்மையான, சட்டத்துக்குட்பட்ட அதிகாரியின் நாவு முழங்கிய வாக்கியங்களைக் கவனித்தீர்களா? 'நீங்கள் என்னை விலை கொடுத்து வாங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே'.

மனிதன் எத்துணை வாய்மையான பண்புகளைக் கொண்டவனாயிருந்தாலும் சரியே - ஓர் எல்லையைக் கடக்கும் போது அவனுக்கும் ஒரு "விலை" ஏற்படுகிறது. குறிப்பாக கொடுக்கப்படும் விலை அவனுடைய தகுதிக்கு அதிகமாக இருந்தால் அவன் உள்ளத்தில் உணர்ச்சிப் புயல் தோன்றுகிறது மயக்கத்தினால் தலைசுற்றித் தொடங்குகிறது. இதற்கு நேர்மாறாக, இறைவன் மீது திடமான நம்பிக்கை கொண்டபின், இறை உவப்பைப் பெறுவதே தனக்குரிய விலை என்று மனிதன் கண்டு கொண்டுவிட்டால் படைத்தவனைத் தவிர படைப்பினங்கள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து முயன்றாலும் இந்த விலையை வழங்க முடியாது. எனவேதான் இறைவன் மீது உறுதியான நம்பிக்கை வைக்கும் மனிதனை விலைக்கு வாங்க எந்தப் படைப்பினங்களாலும் முடியாது!.

அவனுடைய விலையை நிர்ணயிப்பதற்கு எந்தப் படைப்பினத்திற்கும் வலிமையில்லை. உண்மையான இறை நம்பிக்கையாளன் எப்பொழுதும் விற்கப்படுவதில்லை. ஊழலின் நிழல் அவன் மீது சிறிதும் படுவதில்லை . நேர்மை நீதி ஆகியவற்றின் மீது உறுதியாக நிலைத்து நிற்க , படைப்பினங்களைவிட, மேன்மை வாய்ந்த , வலிமை வாய்ந்த , மிக உன்னதமான, உயர்ந்த பண்புகளைக் கொண்ட ஓர் இறைவன் மீது திடமான நம்பிக்கை கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்".

**ஆக்கம்: ஷிஹாப்**

# நபிகளார் கொடுமையாகத் தாக்கப் பட்டபோது....

உர்வா இப்னு ஜுபைர் (ரழி) கூறுகிறார்:

நான் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அவர்களிடம் இணைவைப்பவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் அரக்கத்தனமாக நடந்து கொண்டவற்றில் மிகக் கொடூரமான ஒன்றை எனக்கு சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கவர் "நபி (ஸல்) அவர்கள் கஅபாவில் ஹஜருல் அஸ்வதிற்கு அருகில் தொழுது கொண்டிருந்தபோது உக்பா இப்னு அபூமுஈத் அங்கு வந்து தனது மேலாடையை நபி (ஸல்) அவர்களின் கழுத்தில் போட்டு மிகக் கடினமாக இறுக்கினான். அபூபக்ர் (ரழி) விரைந்து வந்து அவனது புஜத்தைப் பிடித்துத் தள்ளி நபி (ஸல்) அவர்களை விட்டும் அவனை விலக்கிவிட்டு "தனது இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காகவா ஒருவரை கொலை செய்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். (புகாரி)

# ஹம்ஜா(ரலி) இஸ்லாமை தழுவுதல்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஹம்ஜா அவர்கள். நபிகளார் இறைவனின் தூதராக நின்று மக்காவில் அறியாமையிலும் மூடநம்பிக்கைகளிலும் மூழ்கிக்கிடந்த மக்களை நேர்வழிக்கு அழைத்துக்கொண்டு இருந்த காலகட்டத்தில் பலத்த எதிர்ப்புகளை சந்தித்துக் கொண்டு இருந்தார்கள். அவ்வேளையில் அவருக்கு பெரும் உறுதுணையாக நின்றார்கள் மாவீரர் ஹம்ஜா (ரலி) அவர்கள்.

அநியாயங்களும் கொடுமைகளும் நிறைந்து காணப்பட்ட அக்காலச் சூழ்நிலையில் ஹம்ஜா இப்னு அப்துல் முத்தலிப் (ரழி) இஸ்லாமைத் தழுவிய நிகழ்ச்சி பெரும் ஆறுதலாக அமைந்தது. நபித்துவத்தின் ஆறாம் ஆண்டு இறுதியில் துல்ஹஜ் மாதத்தில் அவர்கள் இஸ்லாமைத் தழுவினார்கள்.

ஹம்ஜா (ரழி) இஸ்லாத்தை தழுவியதற்கான காரணமும் அலாதியானது. ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் ஸ.ஃபா மலைக்கருகில் அமர்ந்திருந்தபோது அவ்வழியாக வந்த அபூ ஜஹ்ல் நபி (ஸல்) அவர்களை சுடும் வார்த்தைகளால் இம்சித்தான். ஆனால், நபி (ஸல்) அவர்கள் அவனுக்கு எவ்வித பதிலும் கூறாமல் வாய்மூடி மௌனமாகவே இருந்தார்கள். பிறகு அபூஜஹ்ல் ஒரு கல்லால் நபி (ஸல்) அவர்களின் மண்டையில் அடித்து காயப்படுத்திவிட்டு கஅபாவிற்கு அருகில் அமர்ந்திருந்த குறைஷிகளின் சபையில் போய் அமர்ந்து கொண்டான். நபி (ஸல்) அவர்களின் தலையிலிருந்து இரத்தம் கசிந்தது. ஸ.ஃபா மலையில் இருந்த தனது வீட்டில் இருந்துகொண்டு இக்காட்சியை அப்துல்லாஹ் இப்னு ஜுத்ஆனின் அடிமைப் பெண் பார்த்து, வேட்டையிலிருந்து வில்லுடன் வந்து கொண்டிருந்த ஹம்ஜாவிடம் இச்சம்பவத்தைக் கூறினார். ஹம்ஜா (ரழி) குறைஷிகளில் மிகவும் வலிமைமிக்க வாலிபராக இருந்தார். செய்தியைக்கேட்ட ஹம்ஜா (ரலி) சினம்கொண்டு எழுந்தார்.

அபூஜஹ்லை தேடி பள்ளிக்குள் நுழைந்து “ஏ கோழையே! எனது சகோதரன் மகனையா திட்டிக் காயப்படுத்தினாய்! நானும் அவரது மார்க்கத்தில்தான் இருக்கிறேன்” என்று கூறி தனது வில்லால் அவனது தலையில் அடித்து பெரும் காயத்தை ஏற்படுத்தினார். அபூஜஹ்லின் குடும்பமான பனூ மக்ஜூமில் உள்ள ஆண்கள் கொதித்தெழுந்தனர். ஹம்ஜாவிற்கு ஆதரவாக ஹாஷிம் கிளையார்களும் கொதித்தெழுந்தனர். இதனைக் கண்ட அபூஜஹ்ல் “அபூ உமாரா (ஹம்ஜா)வை விட்டுவிடுங்கள். நான் அவரது சகோதரனின் மகனை மிகக் கொச்சையாக ஏசி விட்டேன்” (அதுதான் என்னை அவர் தாக்குவதற்குக் காரணம்) என்று கூறினான். (இப்னு ஹிஷாம்)

● **நிச்சயமாக அந்த (கியாம) நேரம் பற்றிய ஞானம் அல்லாஹ்விடமே இருக்கிறது் அவனே மழையையும் இறக்குகிறான் இன்னும் அவன் கர்ப்பங்களில் உள்ளவற்றையும் அறிகிறான். நாளை தினம் தாம் (செய்வது) சம்பாதிப்பது எது என்பதை எவரும் அறிவதில்லை தான் எந்த பூமியில் இறப்போம் என்பதையும் எவரும் அறிவதில்லை. நிச்சயமாக அல்லாஹ்தான் நன்கறிபவன் நுட்பம் மிக்கவன். (அல்-குர்ஆன் 31:34)**

# விருந்தோம்பல்

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள், "உங்களில் ஒருவர் வலீமா (மண) விருந்துக்கு அழைக்கப்பட்டால் அதனை ஏற்றுச் செல்லட்டும்!" என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவித்தார். (புகாரி)

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள், "ஓர் ஆட்டுக் காலின் கீழ்ப்பகுதி(யை விருந்தாக்கி, அந்த விருந்து)க்கு நான் அழைக்கப்பட்டாலும் நிச்சயம் நான் (அந்த அழைப்பை) ஏற்றுக் கொள்வேன். ஆட்டுக்காலின் கீழ்ப்பகுதி எனக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டாலும் நிச்சயம் நான் அதைப் பெற்றுக் கொள்வேன்." என அபூஹுரைரா(ரலி) அறிவித்தார். (புகாரி)

● பராஉ இப்னு ஆஸிப்(ரலி) கூறினார் :

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் ஏழு விஷயங்களைக் கடைப்பிடிக்கும்படி) எங்களுக்குக் கட்டளையிட்டு ஏழு விஷயங்களை எங்களுக்குத் தடை செய்தார்கள்.

நோயாளிடம் நலம் விசாரிக்கும்படியும், ஜனாஸாவைப் (பிரேத ஊர்வலத்தைப்) பின்தொடர்ந்து செல்லும் படியும், தும்மியவ(ர் அல்ஹம்துலில்லாஹ் -எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று கூறுகையில் அவ)ருக்கு (யர்ஹமுகல்லாஹ் - இறைவன் உங்களுக்குக் கருணை புரிவானாக என்று) பதில் சொல்லும்படியும், விருந்து அழைப்பை ஏற்றுக்கொள்ளும்படியும், சலாம் எனும் முகமனைப் பரப்பும்படியும், அநீதியிழைக்கப்பட்டவருக்கு உதவும்படியும், சத்தியம் செய்தவர் (அதை) நிறைவேற்ற உதவும்படியும் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

மேலும், (ஆண்கள்) தங்க மோதிரங்களை அணிய வேண்டாமென்றும், (யாரும்) வெள்ளிப் பாத்திரத்தில் நீர் அருந்த வேண்டாமென்றும், மென்பட்டுத் திண்டு (மீஸரா), பட்டு கலந்த (எகிப்திய) பஞ்சாடை ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டாமென்றும், சாதாரணப் பட்டு, அலங்காரப் பட்டு, தடித்தப்பட்டு ஆகியவற்றை அணிய வேண்டாமென்றும் எங்களுக்குத் தடை விதித்தார்கள்.(புகாரி)

● அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் அண்டை வீட்டாருக்குத் தொல்லை தரவேண்டாம். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் விருந்தாளியைக் கண்ணியப்படுத்தட்டும். அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் (ஒன்று) நல்லதைப் பேசட்டும். அல்லது வாய் மூடி இருக்கட்டும்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி), (புகாரி)

● ஒரு மனிதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், "இஸ்லாமி(யப் பண்புகளி)ல் சிறந்தது எது' எனக் கேட்டார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "(பசித்தோருக்கு) நீர் உணவளிப்பதும் நீர் அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் சலாம் (முகமன்) கூறுவதுமாகும்" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), (புகாரி)

# இறைவனே மெச்சிய விருந்தோம்பல்

● அபூஹுரைரா(ரலி) அறிவித்தார்:

ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் (விருந்தாளியாக) வந்தார். நபி(ஸல்) அவர்கள் (அவருக்கு உணவளிப்பதற்காகத்) தம் மனைவிமார்களிடம் சொல்லியனுப்பினார்கள். அப்போது அவர்கள், “எங்களிடம் தண்ணீரைத் தவிர வேறெதுவும் இல்லை” என்று பதிலளித்தார்கள்.



எனவே, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (தம் தோழர்களை நோக்கி), “இவரை (தம்முடன் உணவில்) சேர்த்துக் கொள்பவர் யார்?.”.. அல்லது “இவருக்கு விருந்தளிப்பவர் யார்?.”.. என்று கேட்டார்கள். அப்போது மதீனாவாசிகளில் ஒருவர், “நான் (விருந்தளிக்கிறேன்)” என்று சொல்லி அவரை அழைத்துக் கொண்டு தம் மனைவியிடம் சென்றார்.

(மனைவியிடம்) “இறைத்தூதர்(ஸல்) அவர்களின் விருந்தாளியைக் கண்ணியப்படுத்து” என்று கூறினார். அதற்கு அவரின் மனைவி, “நம்மிடம் நம் குழந்தைகளின் உணவைத் தவிர வேறெதுவுமில்லை” என்று கூறினார். அதற்கு அந்தத் தோழர், “உன் (குடும்பத்திற்கான) உணவைத் தயாராக எடுத்து வைத்துவிட்டு விளக்கை ஏற்றி (விடுவதைப் போல் பாவனை செய்து அணைத்து) விடு. உன் குழந்தைகள் உணவு உண்ண விரும்பினால் அவர்களைத் தூங்கச் செய்து விடு” என்று கூறினார்.

அவ்வாறே அவரின் மனைவியும் உணவைத் தயாராக எடுத்து வைத்து, விளக்கை ஏற்றிவிட்டுத் தம் குழந்தைகளைத் தூங்கச் செய்துவிட்டார். பிறகு விளக்கைச் சரிசெய்வது போல் நின்று (பாவனை செய்து கொண்டே) விளக்கை அணைத்துவிட்டார். பிறகு அவரும் அவரின் மனைவியும் உண்பது போல் (விருந்தாளியான) அந்த மனிதருக்கு (பாவனை) காட்டலானார்கள். பிறகு இருவரும் (உணவு உண்ணாமல்) வயிறு ஒட்டியவர்களாக இரவைக் கழித்தனர். காலையானதும் அந்தத் தோழர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் சென்றார். நபி(ஸல்) அவர்கள், “நீங்கள் இருவரும் செய்ததைக் கண்டு இறைவன் இன்றிரவு (மகிழ்ச்சியால்) சிரித்துக் கொண்டான் அல்லது வியப்படைந்தான்” என்று கூறினார்கள்.

அப்போது இறைவன்,

● **மேலும், தாங்களே தேவையுள்ளவர்களாய் இருந்தாலும்கூட, தங்களைவிடப் பிறருக்கே முன்னுரிமை வழங்குகின்றார்கள். உண்மை யாதெனில், யார் தங்கள் மனத்தின் உலோபித்தனத்திலிருந்து காப்பாற்றப்பட்டார்களோ அவர்களே வெற்றி பெறக்கூடியவர்களாவர். (திருக்குர்ஆன் 59:9)**

என்ற வசனத்தை அருளினான். (புகாரி)

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.
- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக

தொடர்பு எண்: **09845373775 / 08867971835**


Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**


**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018(நுங்கம்பாக்கம்), 9840527687(பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994453346 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 அருப்புக்கோட்டை:9043899409 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எஃப்:9845217262


Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

(PRINTED MATTER)


To

.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................




- திண்ணமாக வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பிலும், இரவுபகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன. (திருக்குர்ஆன் 3:190)